# செயலட்டை – சுற்றாடல் (06)

## பிரமி கல்வி நிலையம்

S. மோகன் 0779685514

மாணவர் பெயர் : .....................................

✓ **ஒவ்வொரு வினாவிற்கும் பொருத்தமான விடையைத் தரப்பட்டுள்ள விடைகளிலிருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

1. உரோமம் இல்லாத பிராணிகள்.
   1) மயில், எறும்பு, தவளை 2) அறணை, பல்லி, பாம்பு
   3) கரையான் , எலி , முயல் 4) அணில், உடும்பு, ஓணான்

2. அயடீன் குறைபாட்டால் ஏற்படும் நோய்.
   1) கண்டமாலை 2) மாலைக்கண்
   3) தொண்டை அழற்சி 4) சுவாசநோய்

3. நிறை உணவில் அடங்குபவை.
   1) பால், முட்டை 2) கீரை, கடலை
   3) சோயா, கௌப்பி 4) பால், பருப்பு

4. ஊசி துளை கமராவின் மூலம் ஒரு பொருளை பார்க்கும் போது தெரியும் வடிவம்.
   1) சிறிதாக தென்படும் 2) பெரிதாக தெரியும்
   3) தலைகீழாகத் தெரியும் 4) மங்கலாகத் தெரியும்

5. முண்டத்தை நிமிர்த்தி வைத்து கைவிரல்களை மடித்து தொடைகளில் தொடுமாறு கால்களை அருகருகே V வடிவில் வைத்து சமநிலையாக நிற்கும் சந்தர்ப்பம்.
   1) அணிநடையின் போது 2) பாடசாலை ஒன்றுகூடலின் போது
   3) ஆசிரியருடன் கதைக்கும் போது 4) தேசியகீதம் இசைக்கும்போது

6. நன்னடத்தைச் சான்றிதழைப் பெற செல்லவேண்டிய இடம்.
   1) பிரதேச செயலகம் 2) கிராமசேவகர் அலுவலகம்
   3) மாவட்ட செயலகம் 4) மாநகரசபை

7. சிறுவர் விளையாட்டு அசைவுகளில் ஒன்று.
   1) வாத்து நடை 2) அணிநடை 3) குத்துச் சண்டை 4) மேசைபந்து.

8. தேசிய இலச்சினையை வரைந்தவர்.
   1) D.S சேனநாயக்கா 2) D.P ஜாயா 3) குலதுங்க 4. S.M செனவிரத்ன

9. கல்சியம் அடங்கியுள்ள உணவுகள்.
   1) கீரை வகைகள், முட்டை, உப்பு 2) ஈரல், பருப்பு, பால்
   3) சிறு மீன்கள், பால், கீரை வகைகள் 4) இறைச்சி, பயறு, முட்டை

S.Mohan

10. பராக்கிரம சமுத்திரத்தைக் கட்டிய மன்னன்.
1) பராக்கிரமபாகு 2) விஜயன் 3) வசப மன்னன் 4) மகாசேனன்

11. சிறந்த வித்துக்களின் இயல்புகளில் ஒன்று.
1) தோல் கழன்றிருத்தல் 2) காயங்களின்றி இருத்தல்
3) பிஞ்சாக இருத்தல் 4) பூச்சிகளால் பாதிக்கப்பட்டிருத்தல்

12. வெப்பநிலையை அளக்கப் பயன்படும் கருவி.
1) மழைமானி 2) காற்றுமானி 3) வெப்பமானி 4) ஈரமானி

13. பெருந்தோட்டப் பயிர்களாக கருதப்படுபவை.
1) தேயிலை, இறப்பர், தென்னை 2) கராம்பு, ஏலம், தேயிலை
3) இறப்பர், தென்னை, கறுவா 4) தேயிலை, ஏலம், கறுவா

14. மின்னஞ்சல், தொலைநகல் என்பன.
1) பாரம்பரிய ஊடகங்கள் 2) செவிப்புல சாதனங்கள்
3) இலத்திரனியல் ஊடகங்கள் 4) கட்புல சாதனங்கள்

15. கிளைத் துண்டங்களை நடுவதன் மூலம் வீட்டுத்தோட்டத்தில் பயிர்செய்யக் கூடியவை.
1) கங்குன், வள்ளிக்கிழங்கு 2) கங்குன், பொன்னாங்காணி
3) மரவள்ளி, கீரை 4) வற்றாளை, வள்ளிக்கிழங்கு

16. வாள் ஒன்றை கூர்மையாக்குவதற்கு தச்சன் பயன்படுத்தும் உபகரணம்.
1) சீவுளி 2) தீதாள் 3) அரம் 4) எண்ணெய்கல்

17. வானவில்லில் அடங்கும் நிறங்கள்.
1) செம்மஞ்சள், பச்சை, சிவப்பு 2) நீலம், ஊதா, வெள்ளை
3) மஞ்சள், பச்சை, வெள்ளை 4) கறுப்பு, நீலம், சிவப்பு

18. வடக்கு வானில் ஏழு உடுக்களைக் கொண்டு காணப்படும் உடுத்தொகுதி.
1) தென்சிலுவை 2) சிம்மம் 3) கலப்பை 4) கார்த்திகை

19. மனதை ஒருநிலைப்படுத்தும் செயற்பாடுகளில் ஐந்தாவது படிமுறை.
1) பிரார்த்தனை 2) உடலைத் தளர்த்தல் 3) மலர்வு 4) மனதைத் தளர்த்தல்

20. இலங்கையில் விலங்குகளை வளர்த்து பால் உற்பத்தி செய்யப்படும் தொழிற்சாலை அமைந்துள்ள பிரதேசம்.
1) வெலிசறை 2) அம்பேவல 3) பொலன்னறுவ 4) குருநாகல்

21. அஞ்சல் ஓட்டப்போட்டியில் முதலாவது கட்டளை.
1) ஆயத்தம் 2) ஆரம்பம் 3) ஓடு 4) நிலையாக நிற்றல்


S. Mohan 0779685514
S.Mohan